திரு. கே. விநாயகம் : குறிப்பாகக் கணக்கு இல்லை என்றாலும்கூட, போன ஆண்டு இந்தத் தொழிலில் அதிகமான மக்கள் ஈடுபட்டார்கள் என்பதும், இந்த ஆண்டு அதைவிட அந்த எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதும், அந்த விஷயமாவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏ.வி.எம். ஸ்டுடியோவில் சென்ற ஆண்டு வேலை செய்த தொழிலாளர்கள் 160 பேர்கள், படத் தயாரிப்பு நிறுத்தப்பட்ட காரணத்தினால் குறைக்கப்பட்டார்கள். அதற்குப்பிறகு உடனே முருகன் பிரதர்ஸ் என்ற பெயரில் அவர்களுடைய பிள்ளைகளே அந்தத் தொழில் நிறுவனத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினால், மீண்டும் தொழில் ஆரம்பிக்கப்பட்டு 70 தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதேமாதிரி அருணாசலம் ஸ்டுடியோ மூடப்பட்டுவிட்ட காரணத்தினால் 50 தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள். ஏ. எல். எஸ். அந்த ஸ்டுடியோவை எடுத்துக் கொண்ட பிறகு 30 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. பிரகாஷ் ஸ்டுடியோவில் 36 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள், பின்பு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். திரு. சித்தன் அவர்கள் மொத்தமாகக் கேள்வி கேட்டார்கள். மொத்தமாகச் சேர்த்துதான் என்னிடம் விவரம் இருந்தது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பற்றி ஸ்டுடியோ வாரியாக தனியாகக் கேள்வி கேட்டிருந்தால் ஸ்டுடியோ வாரியாகச் சொல்லியிருக்க முடியும்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், அருணாசலம் ஸ்டுடியோவில் 50 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள், அவர்களில், 30 பேர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டதாகவும், மற்ற 20 பேர்களைச் சேர்க்கப்படவில்லை என்றும் தெரிகிறது. அதாவது அரசாங்கத்தின் கணக்கில் வந்திருக்கிறதா ? அதையாவது முன்னால் அறிவித்திருந்தால் நல்லது அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். அதைச் சொல்லியிருக்கலாம் இல்லையா என்பது கேள்வியாகாது. அமைச்சர் விளக்கம் அளித்து விட்டார்கள். ஏன் இப்படிப்பட்ட விடை அளிக்கவில்லை என்று சொல்வது கேள்வியாகாது.

திரு. டி. மார்ட்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அருணாசலம் ஸ்டுடியோவிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட 50 பேர்கள் வேலை இழந்தார்கள் என்றும், அவர்களில் 30 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் சொன்னார்கள். மீதம் உள்ள 20 பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்களா, இல்லையா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி கேட்டிருப்பது, "பெருவாரியான நபர்கள் வேலையின்றி இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா" என்று இருக்கிறது. அதற்குப் பெருவாரியாக வேலை இழக்கவில்லை என்று பதில் அளித்திருக்கிறேன். மற்றவர்களையும் எடுப்பதுபற்றிப் பேச்சுவார்த்தை நடக்கிறது.

Cellular Concrete Plant.

***468 *Q.*—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to start a cellular concrete plant in our State ?**

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஆம்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கலவை எதற்கு உபயோகப்படுகிறது என்று கூற முடியுமா?

1969 மார்ச் 25]

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இது செங்கலுக்குப் பதிலாக சுவர்கள் எழுப்புவதற்கும், சுவர் எந்த உயரத்திற்கு வேண்டுமானாலும் எழுப்புவதற்க்கும், பல மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்தப் புழைக் கற்களைப் பயன்படுத்தலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த செலுலார் காங்க்ரீட் செகோஸ்லோவாகியா நாட்டுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? செங்கலுக்குப் பதிலாக இதைப் பயன்படுத்துவதால் என்னென்ன நன்மைகள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதைத்தான் இப்பொழுது சொன்னேன். செங்கலுக்குப் பதிலாக உபயோகிக்கும்போது, இது செங்கலை விட கனம் குறைவாக இருக்கிறது, லேசானது, புழைக் கற்களை எவ்வளவு உயரமானதாக இருந்தாலும், சுவற்றை எழுப்பலாம், எத்தனை மாடிக் கட்டடமாக இருந்தாலும் இந்தக் கற்களை உபயோகிக்கலாம். ஆர்.ஸி.ஸி. ரூப்புக்குப் பதிலாக இந்தக் கற்களைப் பயன்படுத்தலாம் என்றும் கருத்துக் கூறப்படுகிறது.

Slums around S.I.E.T. College.

***469 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—**

(a) whether the S.I.E.T. College for Women in Madras City is surrounded by slums ; and

(b) whether any request for their clearance has been received by the authorities ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம். S.I.E.T. கல்லூரியைச் சுற்றிலும் ஐந்து சேரிகள் உள்ளன.

(இ) இதுவரை இம்மாதிரியான வேண்டுகோள் அரசாங்கம் அல்லது வீட்டுவசதி வாரியத்தின் கவனத்திற்கு வரவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், அண்மையிலே தயாரிக்கப்பட்ட அறிக்கையிலே, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் ஸோஷல் ஒர்க், தயாரிக்கப்பட்ட அறிக்கையில், நாலில் ஒருபாகம் சென்னையிலே நம்முடைய ஜனத்தொகை 20 லட்சத்தில் கால் பாகம், கிட்டத்தட்ட 5 லட்சம் சேரிகளில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. அப்படி இருப்பதால், இந்த அரசாங்கம் சேரிகளில் இருக்கும் மக்களை வேறு நல்ல இடத்திற்குக் கொண்டுபோய் அமர்த்துவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அது எந்த அளவிற்கு வெற்றிபெற்றிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : சேரிகளை அகற்றும் திட்டத்தில் கூடுமான வரையில் அவர்களை அங்கங்கேயே வைக்க வேண்டும் என்றுதான் செய்யப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது, 491 சேரிகள் சென்னையில் இருக்கின்றன. கிட்டத்தட்ட 100 சேரிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 57 சேரிகளில் வேலை துவங்கப்பட்டிருக்கிறது. வேலை நடந்துகொண்டே இருக்கிறது.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் ஒரு ஸ்விம்மிங் பூல் இருப்பதாகக் கூறுகிறார்கள் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே இருப்பது சேரிகளைப் பற்றி . . . .

Thiru T. MARTIN : Sir, there is a swimming pool in the S.I.E.T. College.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி இந்த அமைச்சரிடம் வராது. இவர்கள் சேரியைப்பற்றித்தான் சொல்ல முடியும்.

Thiru T. MARTIN : Sir, I am coming to that . . . . . .